## பட்டாம்பூச்சிகளின் முக்கியத்துவம்

வண்ணத்துப்பூச்சிகள் ஏராளமாக இருப்பது ஒரு சுற்றுச்சூழல் அமைப்பு செழித்து வளர்கிறது என்பதற்கான அறிகுறியாகும். பட்டாம்பூச்சிகள் மகரந்த சேர்க்கையில் முக்கிய பங்கு வகிக்கின்றன. மேலும் பட்டாம்பூச்சிகள், புழு நிலையில் இருக்கும்பொழுது பறவைகளின் உணவாதாரமாக இருக்கின்றன.
பட்டாம்பூச்சிகள் இல்லாத உலகம் வண்ணமில்லாத உலகம் என்பது எல்லோரும் அறிந்த உண்மையே !!!

## தமிழ்நாட்டின் மாநில பட்டாம்பூச்சி



## தமிழ் மறவன்

**Tamil Yeoman - Cirrochroa thais**

தமிழ்நாட்டின் மாநில பட்டாம்பூச்சியாக தமிழ் மறவன் 2019-ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. தமிழ் மறவன் மேற்கு தொடர்ச்சி மலைகளில் அடர்ந்த காடுகளில் மட்டுமே காணப்படும் பட்டாம்பூச்சி. இந்த பட்டாம்பூச்சி இலங்கையிலும் உள்ளது. இதன் இறக்கையின் நீளம் 60-75 mm. மரவெட்டி என்ற காட்டு மரத்தில் தான் இது பொதுவாக முட்டையிடும்.

## பட்டாம்பூச்சிகளை பற்றி அறிந்து கொள்வோம் !

இந்தியாவில் எத்தனை வகை பட்டாம்பூச்சிகள் உள்ளன ?
ஏறத்தாழ 1500 வகை பட்டாம்பூச்சிகள் இந்தியாவில் உள்ளன.

தமிழ்நாட்டில் எத்தனை வகை பட்டாம்பூச்சிகள் உள்ளன ?
ஏறத்தாழ 327 வகை பட்டாம்பூச்சிகள் தமிழ்நாட்டில் உள்ளன.

தமிழ்நாட்டின் மாநில பட்டாம்பூச்சி எது ?
தமிழ் மறவன்.

பட்டாம்பூச்சிகளின் உணவு என்ன ?
பெரும்பாலான பட்டாம்பூச்சிகள் மலர்களில் தேன் உறியும் ,சில அழுகிய பழங்களை , மிருகங்களின் எருக்களை விரும்பும்.

பட்டாம்பூச்சிகளின் வாழ்க்கை சக்கரம் என்ன ?
முட்டை --புழு --கூட்டுப் புழு--பட்டாம்பூச்சி.

பட்டாம்பூச்சிகள் எத்தனை நாள் உயிர் வாழும் ?
பட்டாம்பூச்சிகளான பின்பு ஏகதேசம் 2-4 வாரங்கள்தான் உயிரோடு இருக்கும்.

இந்தியாவின் பெரிய பட்டாம்பூச்சி எது ?
தென்அழகி.

இந்தியாவின் சிறிய பட்டாம்பூச்சி எது ?
சிறு ரத்னநீலன்

பட்டாம்பூச்சி இல்லாத கண்டம் உண்டா ?
ஆம் , அன்டார்டிகா.

பட்டாம்பூச்சிகள் மண்ணில் ஏன் அமர்கின்றன ?
மண்ணில் உள்ள தாதுப்பொருட்களை உண்ணுவதற்காக அமர்கின்றன.



கருநீல நாடோடி Dark Wanderer

# பட்டாம்பூச்சிகள் பலவிதம் !



knf-india.in

Kanniyakumari Nature foundation



Blue Pansy
Junonia orithiya
நீல வசீகரன்



Angled Castor
Ariadne ariadne
வரி ஆமணக்கு சிறகன்



Banded Blue Pierrot
Discolampa ethion
பட்டை நீலன்



Baronet
Euthalia nais
அக்னி சிறகன்



Black Rajah
Charaxes solon
கறுப்புச் சிறகன்



Blue Admiral
Kaniska canace
நீல ராஜன்



Bright Babul Blue
Azanus ubaldus
அடர் பபூல் நீலன்



Blue Mormon
Papilio polymnestor
கருநீல வண்ணன்



Common Banded Peacock
Papilio crino
மயில் அழகி



Common Baron
Euthalia aconthea
கனி விரும்பி



Common Five-Ring
Ypthima baldus
ஐந்து வட்டன்



Common Grass Yellow
Eurema hecabe
மஞ்சளாத்தி



Common Grass Dart
Taractrocera maevius
புல் துள்ளி



Common Guava Blue
Virachola isocrates
கொய்யா நீலன்



Common Gull
Cepora nerissa
மஞ்சாடை



Common Hedge Blue
Acytolepis puspa
புதர் நீலன்



Common Imperial
Cheritra freja
பேரரசு



Common lascar
Pantoporia hordonia
லஸ்கர்



Common Leopard
Phalanta phalantha
சிறுத்தை



Common Line Blue
Prosotas nora
வெண் வரி நீலன்



Common Sergeant
Athyma perius
சார்ஜெண்ட்



Common Silverline
Cigaritis vulcanus
வெள்ளிவரையான்



CrimsonTip
Colotis danae
செங்கடவி



Dark Blue Tiger
Tirumala septentrionis
கருநீலப்புலி



Dark Cerulean
Jamides bochus
அடர் புங்க நீலன்



Dark Palm-Dart
Telicota bambusae
அடர் பனை துள்ளி



Fulvous Pied Flat
Pseudocoladenia dan
சிறு பழுப்பு இலையொட்டி



Southern Birdwing
Troides minos
**தென்அழகி**



Indian Sunbeam
Curetis thetis
கதிரவன்



Indian Nawab
Polyura bharata
நவாப்



Blue Oakleaf
Kallima horsfieldii
நீல இலை சிறகன்



Lime Swallowtail
Papilio demoleus
எலுமிச்சை அழகி



Little Orange-Tip
Colotis etrida
சின்ன ஆரஞ்சு நுனிச்சிறகன்



Malabar Glad-eye Bushbrown
Mycalesis junonia
பெருங்கண்ணன்



Malabar Tree Nymph
Idea malabarica
வனதேவதை



Crimson Rose
Pachliopta hector
ராஜா வண்ணத்தி